Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 10

சனிக்கிழமை
06 டிசெம்பர் 2025

கார்த்திகை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## தமிழகத்தின் உதவிக்கப்பல்
### இன்று வருகிறது

சென்னை, டிசெ. 6
டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவும் வகையில் தமிழ் நாட்டில் இருந்து இன்று நிவாரணக் கப்பலொன்று அனுப்பப்படவுள்ளது.
சென்னை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள அந்தக் »11

வீடுகளைத் தூய்மைப்படுத்துவதற்கான நிவாரண நிதி பெறுவோரின்

# யாழ்ப்பாணப் பட்டியலை உடன் காட்சிப்படுத்துக!

### கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், டிசெம்பர் 6
யாழ்ப்பாணத்தில் வீடுகளைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைக்காக கோரப்பட்ட தரவுகளில் ஊழல்கள் உள்ளன. எனவே, யாழ்ப்பாணத்தில் வீடுகளைத் தூய்மைப்படுத்துவதற்காக நிதி கோரியவர்களின் விவரங்களை பிரதேச செயலகங்கள் தோறும் காட்சிப்படுத்த வேண்டும் – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். »11

யாழ். பழைய பூங்காவில் அமைக்கப்படும்

## உள்ளக விளையாட்டரங்கின் கட்டுமானங்களை நிறுத்துக!

### யாழ்.மாவட்ட நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 6
யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைக்கப்படும் உள்ளக விளையாட்டரங்கின் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு யாழ்ப்பாணம் மாவட்ட »11

## மக்களைப் பாதுகாக்கவே அவசரகாலச்சட்டம் அமுல்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 6
மக்களை பாதுகாப்பதற்காகவே அவசரகாலச்சட்டம் பயன்படுத்தப்பட்டது. மாறாக மக்களை ஒடுக்குவதற்கு அது பயன்படுத்தப்படவில்லை. அரசமைப்பை மீறும் வகையில் எவ்வித நடவடிக்கையும் முன் »11

டித்வா பேரழிவு

## பலி 607

கொழும்பு, டிசெ. 6
டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 607ஆக அதிகரித்துள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள் »04

## டெங்கு பரவும் ஏதுநிலைகள் 9 பேருக்கு ரூ.72,000 தண்டம்!

### பருத்தித்துறை நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், டிசெ. 6
கரவெட்டியில் வீட்டு சூழலில் டெங்கு பரவும் ஏதுநிலையை வைத்திருந்த 9 ஆதனங்களின் உரிமையாளர்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றால் 72 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட் »04

இடரால் பாதிக்கப்பட்ட

## வீடுகளை அமைக்க 50 இலட்சம் ரூபா நிதி

### அநுர அதிரடி அறிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 6
டித்வா புயல் ஏற்படுத்திய பேரழிவுகளால், தமது வீடுகளை முற்றாக இழந்த மக்களுக்கு, வீடுகளை மீளவும் நிர்மாணிப்பதற்காக 50 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்தார். »11

## யாழ். மாநகரசபையின் பட்ஜெட் நிறைவேற்றம்!

யாழ்ப்பாணம், டிசெ. 6
யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இரண்டு மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.
யாழ். மாநகரசபையின் சபா மண்டபத்தில் »04



‘அப்ப உந்த வெள்ளத்தை வைச்சு உழைக்க நினைச்சவையின்ர பாடு திண்டாட்டம் தான் கண்டியளோ’

நிதியைத் திரட்டுவதற்காக

## முன்னாள் ஜனாதிபதிகளை அழைத்து ஆலோசியுங்கள்

### அரசுக்கு ஹக்கீம் அறிவுறுத்து



கொழும்பு, டிசெ. 6
பேரிடரில் இருந்து இலங்கையை மீட்பதற்காக, முன்னாள் ஜனாதிபதிகளை அழைத்து அவர்களின் ஆலோசனையை அரசாங்கம் பெறவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். »12

## 157 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது பட்ஜெட்!

கொழும்பு, டிசெ. 6
2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நாடாளுமன்றத்தில் நேற்று 157 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.
ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நேற்று »04

## இல்லாதோருடன் பகிர்ந்து நத்தாரைக் கொண்டாடுக!

### யாழ். மறைமாவட்டம் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 6
நத்தார் பண்டிகையை எளிமையாகவும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுடன் இருப்பதைப் பகிர்ந்து கொண்டாடுமாறும் »04

## ஐ.எம்.எப். ஆறாவது தவணை இன்னும் இரண்டு வாரங்களில்

விரிவு பக்கம்:-11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 05.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4276
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள்: 02 17 75 79
விசேட எழுத்து B

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 05.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1343
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள்: 12 14 19 44

**NLB ஜய**
திகதி 05.12.2025
சீட்டிழுப்பு இலக்கம்
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

**மெகா பவர்**
திகதி 05.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2382
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள்: 02 06 21 39

**மஹஜன சம்பத**
திகதி 05.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 6034
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள்: 6 3 1 8 7 3

**தன நிதானய**
திகதி 05.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2064
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள்: 10 21 22 25
விசேட எழுத்து V

**சுப தவசக்**
திகதி 05.12.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0150
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 03 14 33

# 'டித்வா' புயலால் பலத்த அடி அரசாங்கம் வீழ்ந்துவிடாது!

## பிரதமர் ஹரிணி திடம்



**கொழும்பு, டிசெ.6**
**அண்மையில் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பேரழிவு ஏற்பட்டபோதிலும், மக்களின் அசைக்கமுடியாத மனவலிமையினாலும் ஒற்றுமையினாலும் இலங்கை வேகமாக மீண்டுவருகின்றது. எம்மீது ஒரு பலத்த அடி விழுந்திருக்கிறது, ஆயினும் நாம் வீழ்ந்துவிடவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேற்றம், அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களை வலுப்படுத்துதல், வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய மறுசீரமைப்புப் பணிகளை வழிநடத்த அரசாங்கம், உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றுடன் இணைந்து குறுகியகால மற்றும் நீண்ட கால மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. வலுவான டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்க நாம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.

தற்போதுள்ள தொழில்நுட்பத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக இந்த ஆண்டு மழையின் சரியான முன்னறிவிப்பைப் பெற்றுக்கொள்ளுதல் வரையறுக்கப்பட்டிருந்தது. இதனால் எதிர்கால அனர்த்த நிலைமைகளைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்கு இலங்கையின் முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகளை வலுப்படுத்துவதிலும் தொழில்நுட்பத்துறையில் முதலீடுகளை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டி இருக்கின்றன. இலங்கையை ஒரு முன்னணித்தளமாக மாற்றுவது தொடர்பான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு, மறுசீரமைப்புகள் மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் தொடர்பான முன் முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 05.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0742
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 0 8 2 2 2 8

**Super Ball DLB**
திகதி 05.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3008
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கம் 02 27 30 78

**சனிதா DLB**
திகதி 05.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 11 42 43 68
வெற்றி வாரம் 5169

**SASIRI DLB**
திகதி 05.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0838
வெற்றி இலக்கம் 04 29 36

**லக்ன ராசி**
திகதி 05.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
கும்பம்
வெற்றி இலக்கம் 10 36 39 44
சீட்டிழுப்பு வாரம் 4720

**KAPRUKA DLB**
திகதி 05.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கம் 18 39 43 73
வெற்றி வாரம் 2184

**அத கோடிபதி DLB**
திகதி 05.12.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கம் 04 21 73 76
வெற்றி வாரம் 2834


## ஆசிய அபிவிருத்தி வங்கியால் 3 மில். டொலர் உதவித்தொகை

கொழும்பு, டிசெ.6
இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசியமான உடனடி மற்றும் மனிதாபிமான நிவாரண உதவிகளுக்காக 3 மில்லியன் டொலர் நிதியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதியளித்துள்ளது.

மிகமோசமான இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளால் உத்தியோகபூர்வ உதவிக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது என்றும், அதற்கமைய இலங்கைக்கு 3 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மஸாட்டோ கன்டா தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும், நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என இலங்கை, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கும், மக்களுக்கும் உறுதியளிக்கிறேன் என்றும் மஸாட்டோ கன்டா குறிப்பிட்டுள்ளார்.

மிகமோசமான அனர்த்தங்களின் பின்னர் உயிர் காக்கும் உடனடி நிவாரண உதவிகளை வழங்குதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் ஆசிய-பசுபிக் அனர்த்த உதவி நிதியத்தின் ஊடாகவே இந்த நிதியுதவி வழங்கப்பவுள்ளது. (எ-இ)



## பருவப்பெயர்ச்சியின் பின்பே மாவிலாற்றில் புனரமைப்பு

திருகோணமலை, டிசெ.6
சேதமடைந்துள்ள மாவிலாறு அணைக்கட்டை முழுமையாகப் புனரமைக்க வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை முடியும்வரை காத்திருக்கவேண்டியிருக்கும் என்று திருகோணமலைப் பிராந்திய நீர்ப்பாசனத் துறைப் பணிப்பாளர் பிரதம எந்திரி க.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மகாவலி கங்கைமூலம் வந்துசேர்ந்த மிதமிஞ்சிய வெள்ளநீர் ஏற்படுத்திய தாக்கத்தினால் மாவிலாறு அணைக்கட்டு கடந்த 30ஆம் திகதி உடைப்பெடுத்தது. மாவிலாறு அணைக்கட்டுப் பகுதிக்குச் செல்லும் வீதி இப்போதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. வெள்ளம் வடிந்த பின்பே சேதமடைந்த அணைக்கட்டுப் பகுதியை நேரில் சென்று ஆய்வு செய்து முழுமையான சேதத்தை மதிப்பிடப்படமுடியும் என்றும் அவர் கூறினார். (சு-50)

## ஆரம்பக்கட்ட நிவாரணமாக கனடா ஒரு மில். டொலர்

கொழும்பு, டிசெ.6
இலங்கையில் ஏற்பட்ட டித்வா புயல் வெள்ளப் பேரழிவுக்கு அவசர நிவாரணமாக, ஆரம்பக் கட்ட மனிதாபிமான உதவியாக ஒரு மில்லியன் கனேடிய டொலர் வழங்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது.

இந்த நிதியுதவி நம்பகமான சர்வதேச பங்காளர்கள்மூலம் தற்காலிக் கூடாரங்கள், தூய்மையான குடிநீர், சுகாதாரசேவைகள் மற்றும் பிற அத்தியாவசிய உதவிகள் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு வழங்கப்படும் எனக் கனடா அறிவித்துள்ளது. கனடா, இலங்கையின் நிலைமையை நெருக்கமாக கவனித்துவருகின்றது என்றும், தேவைகள் அதிகரிக்கும்போது தொடர்ந்தும் பதிலளிக்கத் தயாராக உள்ளது என்றும் அறிவித்துள்ளது. இந்தப் பேரிடரில் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆதரிப்பதில் கனடா உறுதியாக உள்ளது. மனிதாபிமான சவால்களைச் சமாளிக்க சர்வதேச பங்காளர்களுடன் இணைந்து செயற்படுவோம் எனவும் கனடா தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைப் பேரிடர் காரணமாக 1,289 வீடுகள் முற்றாகச் சேதம்

கொழும்பு, டிசெ.6

**நிலச்சரிவுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாதிப்புகள் காரணமாக சுமார் ஆயிரத்து 289 வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன என்றும், சுமார் 44 ஆயிரத்து 500 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன என்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், நிதி அமைச்சு மற்றும் தேசிய வீட்டமைப்பு அதிகாரசபை அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்பு நடைபெற்றது. அதிகாரசபையின் அதிகாரிகள் இந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாதகமான வானிலையால் பாதிக்கப்பட்ட முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளை அடையாளம் காண்பது முறையான மற்றும் வெளிப்படையான வழிமுறையின்படி மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யவேண்டும் என்று நிதி அமைச்சகம் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தினார்.

இழப்பீட்டுச் செயல்முறைக்கு அவசியமான துல்லியமான தரவுகளைத் திறமையாக சேகரிக்க ஒரு சிறப்புப் பொறிமுறையை நிறுவவேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தினார். அதிக ஆபத்துள்ள மற்றும் பேரிடர் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வாழும் மக்கள் மீண்டும் மீண்டும் இதுபோன்ற பேரிடர்களால் பாதிக்கப்படாமல் இருக்க நீண்டகால மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த ஜனாதிபதி, இந்த முயற்சிகளை ஆதரிக்க நம்பகமான தரவுகளைச் சேகரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)



# ஆறுமுகநாவலரின் 146ஆவது நினைவுதினம்

வவுனியா, டிசெ.6

ஆறுமுகநாவலரின் 146ஆவது நினைவுதினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவுச்சிலையடியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது ஆறுமுகநாவலரின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அவர் தொடர்பான நினைவுரைகளும் இடம்பெற்றன. வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்கள், நகரசபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-110)

# பேராதனைப் பல்கலைக்குள் வெள்ளம் ரூ.5 பில்லியன் சொத்துகள் பாதிப்பு

கொழும்பு, டிசெ.6

கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் பெறுமதிமிக்க உபகரணங்கள் மற்றும் சொத்து இழப்புகள் 5 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

கல்வி நடவடிக்கைகளுக்கும், ஆய்வுகளுக்கும் பயன்படுத்தப்படும் பல அதிநவீன உபகரணங்கள் சேதமடைந்துள்ளன. தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையத்தில் சேதமடைந்த உபகரணங்களின் சந்தை மதிப்பு மட்டும் 60 மில்லியன் ரூபாவைத் தாண்டுகிறது. பல்கலைக்கழகத்தில் இருந்த 2,000 லீற்றர் கொள்ளளவுடைய 7 பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டு மைதானம் உட்பட பல இடங்கள் சேதமடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# லண்டனில் கத்திக்குத்து; கரவெட்டி இளைஞர் பலி

லண்டன், டிசெ.6

லண்டனில் நடந்த கத்திக்குத்துச் சம்பவம் ஒன்றில் வடமராட்சியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இ.ஜெயந்தன் (வயது-32) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 30ஆம் திகதி நடந்த கத்திக்குத்துச் சம்பவத்தில் இவர் படுகாயமடைந்த நிலையில், அங்குள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த அவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார். கறுப்பின இளைஞர்கள் சிலரே இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக லண்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-66)

—— அனர்த்த உயிரிழப்புகள் ——

# இறப்புச் சான்றிதழ்கள் வழங்க வர்த்தமானி

கொழும்பு, டிசெ.6

நாட்டைச் சூறையாடிய டித்வா புயல், மண்சரிவு மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் உயிரிழந்தவர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கான புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

கண்டி, நுவரெலியா, பதுளை, குருநாகல், மாத்தளை, கேகாலை, கம்பஹா, முல்லைத்தீவு, அநுராதபுரம், கொழும்பு, யாழ்ப்பாணம், பொலநறுவை, மன்னார், புத்தளம், இரத்தினபுரி, மொனராகலை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா மற்றும் களுத்துறை ஆகிய நிர்வாக மாவட்டங்களிலிருந்து நடைமுறைக்குவரும்வகையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது. (ச-இ)




# உக்கிரமான அக்கிரம்

யாழ்ப்பாணத்தில வெள்ளநிவாரணத்துக்கு 36 கோடி ரூவா வந்த செய்திதான் இப்ப எல்லா இடமும் பத்தியெரிஞ்சபடி இருக்குது. ஒருத்தர்கூட இப்பிடி அள்ளுகொள்ளையா நிவாரணம் வந்ததுக்கு ஆதரவு தெரிவிக்கேலை. எல்லாருமே 'காலளவு வெள்ளம் வந்த எங்களுக்கெல்லாம் ஏன் நிவாரணம் தரோணும்?' எண்டுதான் கேக்கினம். நிவாரணப்பட்டியலில எல்லாரையும் ஆகலும் கடுப்பேத்தின இடம் நெடுந்தீவுதான். நெடுந்தீவில எவ்வளவு சனம் இருக்கெண்டு எல்லாருக்குமே வடிவாத்தெரியும். போனவருசம் அங்க கணக்கெடுப்பு நடத்தேக்க எண்ணூற்று சொச்சக் குடும்பம் தான் அங்க இருக்கெண்டு பதிவில இருக்கு. ஆனால் வெள்ள நிவாரணப் பட்டியலில ஆயிரத்து இருநூற்றுச் சொச்சம் குடும்பத்தைப் போட்டிருக்கினம். ஒரு கதைக்கு நெடுந்தீவு முழுக்க வெள்ளம் வந்து மூடியிருந்தாலும் கூட எண்ணூற்றுச் சொச்சம் குடும்பம் தானே பாதிக்கப்பட்டிருக்கோணும்? பிறகென்னெண்டு ஆயிரத்து இருநூறு குடும்பங்களைப் பதிஞ்சவை? என்னதான் வேகமான சனத்தொகைப் பெருக்கமெண்டாலும் இப்பிடி ஒரே வருசத்தில 400 குடும்பங்கள் பெருகினதெண்டது வேகமான சனத்தொகைப் பெருக்கத்தில ஒரு உலக சாதனைதான். வெள்ள நிவாரணத்துக்குப் பதியேக்க அப்பிடியே சேர்த்து கின்னஸ் சாதனைக்கும் பதிஞ்சிருக்கலாம். இன்னமும் காலம் கடக்கேலை, கின்னஸுக்கும் பதிஞ்சு பாக்கலாம்.

நெடுந்தீவில இந்தமுறை பெரிசா வெள்ளப்பாதிப்பு இல்லை. அதாலதான் தற்காலிக இடர்முகாம் ஒண்டுகூட அங்க இருக்கேலை. எல்லாரும் வீட்டிலதான் இருந்தவை, இடம்பெயரவும் இல்லை. ஆனால் அங்க உள்ளவையோட இல்லாதவைக்கும் சேர்த்து நிவாரணத்துக்குப் பதிபட்டிருக்குது. நெடுந்தீவில கூடுதலாக் கூட்டுக்குடும்பங்கள் தான். எப்பிடியும் தாய், தகப்பனோட ஒரு பிள்ளையும், அவையின்ர குடும்பமும் இருக்கும். அதால ஒரு வீட்டில ஒண்டுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருப்பினம். நெடுந்தீவு மட்டுமில்ல பொதுவா யாழ்ப்பாணத்தில இப்பிடி ஒருவீட்டில ரண்டு குடும்பம் இருக்கிறதுதான் வழமை. ஆனால் இந்த முறை குடுபடுற காசு என்னத்துக்கெண்டால், 'வெள்ளம் வந்த வீட்டைத் துப்புரவாக்கிறதுக்குத் தான்'. அப்ப எத்தினை வீட்டுக்குள்ள வெள்ளம் வந்ததெண்டு பார்த்து, கணக்கெடுத்து, அந்த வீடுகளுக்குத்தான் நிவாரணம் குடுக்கோணுமே தவிர, அங்க இருக்கிற எல்லாக் குடும்பத்துக்கும் நிவாரணம் குடுக்கிறதெண்டது பிழையான வேலைதானே. இப்பிடி வீட்டைக் கணக்கெடுக்காமல், குடும்பங்களைக் கணக்கெடுத்து அனுப்பினதும் இப்பிடிப் பாதிக்கப்பட்டவையை விட நிவாரணக்காசு கிடைக்கிற ஆக்களின்ர எண்ணிக்கை கூடுறதுக்கு முக்கியமான காரணம்.

நேற்றுச் சொன்னமாதிரி, இந்தமுறை யாழ்ப்பாணத்துக்கு வெள்ளப்பாதிப்பு வலுகுறைவு. வழக்கமா ஒவ்வொரு மாரி காலத்துக்கும் வாறமாதிரித்தான் இந்தமுறையும் வெள்ளம் வந்தது. கன இடங்களில போனவருசம் வந்தளவு வெள்ளம்கூட இந்த முறை வரேலை எண்டுகினம். காலளவு வெள்ளம் வந்தவைக்கும் ஒரே காசு, மலையகம் மாதிரி கடுமையாப் பாதிக்கப்பட்டு வீடு,வாசல், சொந்தபந்தங்களை இழந்தவைக்கும் ஒரே காசுதான் எண்டு அக்கிரம் செய்தால், டித்வா மாதிரி இன்னும் உக்கிரமான புயல்கள் அடிக்கத்தானே செய்யும்?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளைப் பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாகமுடியும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப்பயணம் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். சகோதர்களுக்காக செலவுசெய்யவேண்டிவரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

## இல்லாதோருடன்...

யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை மனதில் கொண்டவர்களாக எதிர்வரும் நத்தார் பண்டிகையை நாங்கள் கொண்டாட வேண்டும். இல்லாதோருடன் பகிர்ந்து, பொருத்தமற்ற ஆடம்பரங்களைத் தவிர்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்து, பாலன் இயேசு கொண்டு வந்த அமைதி விடுதலை ஆகிய நற்செய்திகளை மக்களுக்கு அறிவித்து, துன்புறும் மக்களோடு ஒன்றிணைந்த உள்ளங்களோடு கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடுங்கள் - என்றுள்ளது. (அ-ம-26)

## 157 மேலதிக...

இரவு 7.30 மணிக்கு ஆரம்பமானது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 158 வாக்கு களும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டும் எதிராக வாக்களித்தார். அத்துடன், இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் இருவர் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தனர். அதற்கமைய, 2026 ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 157 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பட்ஜெட் மீது (ஒதுக்கீட்டுச் சட்டமூலம்) சபாநாயகர் தனது கையொப்பத்தை வைத்துச் சான்றுப்படுத்தினார். இதையடுத்து, பட்ஜெட் 2025ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமாக அமுலுக்கு வந்தது. (அ-ம-44)

## டெங்கு...

டுள்ளது. கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட கரணவாய் பொதுச்சுகாதார பிரிவில் கடந்தவாரம் டெங்குக் கட்டுப்பாட்டு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நுளம்பு பெருகக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த 9 ஆதனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட அனைத்து ஆதன உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் மன்றினால் ஆதன உரிமையாளர்களிற்கு தலா 8 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக 72 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. (அ-ம-100)

## பலி...

ளது. டித்வா புயலால் இலங்கையில் உயிரிழந்தவர் எண்ணிக்கை 486 ஆகவும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 341 ஆகவும் பதிவாகியுள்ளதாக நேற்றுமுன்தினம் இரவு அறிக்கையிடப்பட்டது. காணாமற்போனவர்களில் சிலர் நேற்று சடலங்களாக மீட்கப்பட் டுள்ளனர். இதையடுத்தே, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 607ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 214 பேர் காணாமற்போயுள்ள நிலையில் அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேநேரத்தில், நாடு முழுவதும் 5 லட்சத்து 86 ஆயிரத்து 464 குடும்பங்களைச் சேர்ந்த 20 லட்சத்து 82 ஆயிரத்து 195 பேர் வெள்ளப் பாதிப்பு, இடம்பெயர்வு மற்றும் சொத்து சேதங்களுக்கு ஆளாகியுள்ளனர். அத்துடன் 4 ஆயிரத்து 164 வீடுகள் முழுமையாகவும் 67 ஆயிரத்து 505 வீடுகள் பகுதியளவிலும் சேத மடைந்துள்ளன. (அ-ம)

## யாழ். மாநகர...

மேயர் வி.மதிவதனியால் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப் பட்டது. வாக்கெடுப்பின்போது பட்ஜெட்டுக்கு ஆதரவாக 23 வாக்குகளும், எதிராக 21 வாக்குகளும் செலுத்தப்பட்டன. இதையடுத்து பட்ஜெட் ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 13 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈ.பி.டி.பி.யின் தலா 4 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலா ஓர் உறுப்பினரும் என 23 உறுப்பினர்கள் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர். தேசிய மக்கள் சக்தியின் 10 உறுப்பினர்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 11 உறுப்பினர்களுமாக 21 உறுப்பினர்கள் பட்ஜெட்டை எதிர்த்து வாக்களித்தனர். இதையடுத்து இரண்டு மேலதிக வாக்குகளால் பட்ஜெட் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் கட்சி உறுப்பினர் சு.நிஷாந்தன் நேற்றைய அமர்வில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 10 . 1940



மறைவு
01 . 12 . 2025

### பரமேஸ்வரி அம்மாள் செல்லத்துரை

**(ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்)**

யாழ். கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி அம்மாள் செல்லத்துரை கடந்த 01.12.2025 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - நவமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பு - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், மைதிலி, செல்வக்குமார் (கொழும்பு), மஞ்சுளா (பிரான்ஸ்), செந்தில்க்குமரன் (பிரான்ஸ்), இலட்சுமணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயபவான், யசிந்தா, கஜமுகனி, கணதீபன் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிசாந், லபிசாந், றோகித், டிவ்யா, பிரியந்தி, துஷந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சின்னத்தங்கம், யோகீஸ்வரி, இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற உமாமகேஸ்வரன், காலஞ்சென்ற நவரத்தினம், யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செ.ஜெயபவான் (மருமகன்) - 077 2487 946**
**ஜெ.மைதிலி (மகள்) - 077 3152 997**
**செ.செல்வக்குமார் (மகன்) - 076 6611 064**

**தகவல் : குடும்பத்தினர்**

(CS 30867) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

முயற்சிக்கும்வரை உங்களால் என்ன சாதிக்க முடியும் என்பது உங்களுக்கு ஒருபோதும் தெரியாது.

– மைக்கேல் ஜோர்டன்–


# மலையகம் மன்னிக்கட்டும்..!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளப்பேரிடரால் பதினான்காயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டப்பட்டு, வீடுகளைச் சுத்தம் செய்யும் நிதியாக 36 கோடி ரூபாவுக்கும் மேல் பெறப்பட்டிருக்கின்றது. வெள்ளப் பேரிடரால் கடும் பாதிப்புகளை எதிர்கொண்ட வீடுகளைச் சுத்தப்படுத்துவதற்காக அரசாங்கம் தலா இருபத்தையாயிரம் ரூபா பணத்தை வழங்கிவரும்நிலையில், அந்தப் பணத்தைப் பெறுவதற்காகவே இந்த அபத்தமான கணக்குக் காட்டப்பட்டிருக்கின்றது. இதை எவ்வகையிலும் ஏற்கமுடியாது என்பதை இந்தப் பேரிடர் தொடர்பான குறைந்தபட்சப் புரிதல் உள்ள எவரும் அறிவார்கள். ஏனெனில் மலையகப்பகுதிகளையும், கிழக்கு மாகாணத்தையும், வடக்கின் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களையும் புரட்டியெடுத்த 'டித்வா' யாழ்ப்பாணக் குடாநாட்டை லேசாக எட்டிப்பார்த்துவிட்டு ஓடிவிட்டது.

புயலின் புறச்சுழற்சி காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழைகொட்டித் தீர்த்தது. ஆனால், அதைப் பேரழிவு என்றெல்லாம் கூறுவதற்கில்லை. வழக்கமான மாரிகால இடர்நிலைக்கு ஒப்பான விடயமிது. இவ்வாறான நிலையில்தான், யாழ்ப்பாணம் ஏதோ அழிவின் விளிம்புவரை சென்று திரும்பியதைப் போன்று 25 ஆயிரம் ரூபா நிதிக்காக அரசிடம் கள்ளக்கணக்கு காண்பிக்கப்பட்டிருக் கின்றது. ஏன் இந்த மனநிலை? 'முன்னாள் அரசாங்கங்கள் கொள்ளையடித்து விட்டன', 'நாட்டின் வளர்ச்சியை விழுங்கிவிட்டன' என்ற முறைப்பாடுகளை முன்வைக்காத நபர்களே இல்லை. எனில், யாழ்ப்பாணத்துக்காக பெறப்பட்டுள்ள 36 கோடி ரூபா பணம் எத்தகையது? இதுவும் திருட்டுத்தான் - மோசடிதான் -ஊழல்தான். அதிலும், மலையகத்தில் ஏற்பட்டுள்ள பேரழிவுகளைப் பார்த்த பின்னர், அத்தகைய அழிவுகளுக்கு வழங்கப்படும் நிவாரண நிதியை 'எமக்கும் அதையொத்த பாதிப்புத்தான்' என்ற தோரணையில் பெற்றுவிட எத்தனிப்பது படுகேவலமான மனோநிலை, மனிதத் தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட செயல்.

உண்மையில் இந்த இழிசெயற்பாட்டுக்காக மக்களை முழுவதும் குற்றஞ்சுமத்திவிடமுடியாது. அரச அதிகாரிகள் நாணயமாகவும், நியாயமானவர்களாகவும் இருந்தால் இவ்வாறான 'பகல் கொள்ளைகளுக்கு' இடமில்லை. கிராம அலுவலர்கள் வழங்கும் பட்டியல்களை பிரதேசசெயலர்கள் ஒன்றாக்கி இறுதி செய்கின்றனர். அதை மாவட்டச் செயலர் உறுதிப்படுத்தி சான்றுப்படுத்துகின்றார் அல்லது பரிந்துரைக்கின்றார். ஆக, கிராம அலுவலர்களில் இருந்து இந்தத் தவறு ஆரம்பிக்கின்றது. பாரபட்சம், முறையான கள ஆய்வின்மை, ஏனோதானோ என்ற எண்ணம், அரசாங்கப் பணம்தானே என்ற மெத்தனப்போக்கு ஆகியவற்றால் அவர்கள் பரிந்துரைகளில் தாராளம் காட்டுகின்றனர். கிராம அலுவலர்களால் வழங்கப்படும் பட்டியலில் பிரதேச செயலர்கள் முறையான குறுக்கு விசாரணைகள் எவையும் இல்லாமல் பரிந்துரைக்கு உட்படுத்துகின்றனர். யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கென 36 கோடி ரூபா பெறப்பட்ட பின்னணி இதுவே.

அரசாங்கங்கள் மாறுவதால் ஒருநாடு ஒருபோதும் வளர்ச்சியடையாது. மாற்றம் அரசாங்கத் திணைக்களங்களின் கட்டமைப்புகளில் நிகழவேண் டும். இல்லையேல் அநுர மட்டுமல்ல, சிங்கப்பூரைச் செதுக்கியெடுத்த லீ குவான் யூ வந்தாற்கூட எந்தப் பயனும் இல்லை. ஆன்மாக்களில் தமிழர்கள் அதீத நம்பிக்கை உள்ளவர்கள். மண்ணுள் புதையுண்டு மரித்துப்போன மலையக ஆன்மாக்கள் எம்மை மன்னிக்கட்டும்.



# வாழ்க்கைச் செலவு ஒக்ரோபரில் உயர்வு

கொழும்பு, டிசெ.6

**நாட்டில் நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஒக்ரோபரில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரூ. 65,684 தேவைப்படுகின்றது.**

இது இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது வாழ்க்கைச் செலவில் சிறிது அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் துறையின் அண்மைய தரவுகளில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஒக்ரோபரில் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய 70,840 ரூபா தேவைப்பட்டது என்று தரவு காட்டுகிறது. இரண்டாவதாக கம்பகா மாவட்டத்தில் நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய ரூ. 70,476 தேவை என்று அறிக்கை தெரிவித்துள்ளது. ஒக்ரோபரில் ஒரு குடும்பத்திற்கான மிகக் குறைந்த வாழ்க்கைச் செலவு மொனராகலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. அங்கு நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய 62,894 ரூபா செலவாகும் என்று அறிக்கை தெரிவித்துள்ளது. (ச-இ)



## எம்.பி.யானார் மொஹமட் தாஹிர்

கொழும்பு, டிசெ.6

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக மரிக்கார் மொஹமட் தாஹிர் சபாநாயகர் முன்னிலையில் நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இஸ்மாயில் முத்து முஹம்மது கடந்த மாதம் 28ஆம் திகதி தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து வெற்றிடமான பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வழிந்தது வெள்ளநீர்; வெளிவந்தன குண்டுகள்

திருகோணமலை, டிசெ.6

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டல்காட்டுப் பகுதியில் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் 36 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். மாவிலாறு குளத்தின் அணை உடைந்ததையடுத்து கிண்ணியாப் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. தற்போது வெள்ளநீர் வடிந்துவரும் நிலையில் இந்தக் கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவைப் பெற்று அவற்றைச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ச-இ)

## விவசாயப் பாதிப்புகள் '1918' க்கு அறிவிக்குக

கொழும்பு, டிசெ.6

'டித்வா' புயலின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள விவசாயிகளின் பயிர்ச் சேதங்கள் குறித்து அறிவிப்பதற்கு '1918' என்ற அவசர தொலைபேசி இலக்கத்தை விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த இலக்கத்தை அழைப்பதன்மூலம் விவசாயிகள் பயிர்ச் சேதங்கள் குறித்து மிக இலகுவாக அறிவிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## நெடுஞ்சாலைகள் சேதத்துக்கு 190 பில்லியன் ரூபா மதிப்பீடு

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக நெடுஞ்சாலை வலையமைப்புக்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீடு தற்போது 190 பில்லியன் ரூபா என வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இம்முறை அதிவேக நெடுஞ்சாலைகளுக்குப் பெரும் சேதம் ஏற்படவில்லை. பேரழிவின்போது, கண்டி மாவட்டம் முழுவதும் நாட்டின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது, நகரத்தை மற்றைய பகுதிகளுடன் இணைக்கும் அனைத்து நெடுஞ்சாலைகளும் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - கார்த்திகை 21
07.12.2025
சுபநேரம் : 09.17 - 10.47
ராகுகாலம் : 04.47 - 06.17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
18 . 11 . 1950



மறைவு
04 . 12 . 2025


**சுப்ரமணியம் விக்கினேஸ்வரன்**

கைதடி மடத்துக்கந்தனின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றி வந்த கைதடி தெற்கை சேர்ந்த, தற்போது கொழும்பில் வசிக்கும் சுப்ரமணியம் விக்கினேஸ்வரன் அவர்கள் நேற்று முன்தினம் (04.12.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய மடத்துக்கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**
**கைதடி மத்தி, மூர்த்தியாவத்தை**
**மடத்து கந்தசாமி கோயில் - கைதடி**

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 10 . 1943



மறைவு
04 . 12 . 2025

**கந்தையா இராசரத்தினம்**

மீசாலை கிழக்கை பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம் (04.12.2025) வியாழக்கிழமை தன் சரீரத்தை விட்டு கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசரத்தினம் இராசநாயகியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி (கண்டு - பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி (பேபி), மார்க்கண்டு (துரை), சந்திரா மற்றும் மகேந்திரன் (இந்திரன் - ஸ்பெயின்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜபாமா, இராஜஜீவா (கனடா), காலஞ்சென்ற இராஜசேகர் மற்றும் இராஜபாகர் (கனடா), இராஜகுமார், இராஜசுதாகர் (கிராம சேவையாளர்), இராஜராதிகா, ரெளமியா (இத்தாலி), சர்மிலன் (போதகர்), டிலெக்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியதேவன், திருச்செல்வம் (கனடா), பிரியந்தி, உதயவாகினி, விஜிதா, கனகாங்கி (ஆசா), முருகானந்தா, ரஜனிகாந் (இத்தாலி), ஏஞ்சலின், எஸ்தர் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியங்கா (கனடா), கெற்ஷியா, ரணீஸ், பேர்ணாட், றெஜினோல்ட், செருஜா, அபினதாப், ஜெருஅனா (கனடா), செருஜன், ஜொயானா (கனடா), ஷைனி, றொஸ்னி, ஜெசிக்கா (கனடா), அக்ஷரா, வைஸ்னி, ஜோனதாப் (இத்தாலி), மெஸ்ஸி, ஜொய்ஸ்னி, லியா, தேனுஜன், சுஜித்தா, ஜெசினா ஆகியோரின் அன்புமிகு பேரனும், அகானா இன் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.12.2025) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக அல்லாரையில் உள்ள மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 968 3090, 077 646 2280**

**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

CS/46643) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு
18
11
1950



உதிர்வு
04
12
2025

## திரு. சுப்ரமணியம் விக்கினேஸ்வரன்

யாழ்ப்பாணம் கைதடி தெற்கை சேர்ந்த, தற்போது கொழும்பில் வசிக்கும் திரு. சுப்ரமணியம் விக்கினேஸ்வரன் அவர்கள் 04.12.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் போதநாயகம் தம்பதியினரின் தவப்புதல்வனு காலஞ்சென்றவர்களான தம்பிரட்ணம் தையல்நாயகி ஆகியோரின் அன்பு மருமகனும் கௌரி அவர்களின் அன்புக் கணவரும் மயூரன் மற்றும் பைரவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவஞானேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற ஜெயராஜா, மற்றும் வசந்தி, இளங்கோவன், அசோகன், மேனகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவசோதி மற்றும் சிவராமக்கிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இல.09. விகார மாவத்தை, பொரலஸ்கமுவவில் ( பெப்பிலியான சந்திக்கு அருகாமையில்) உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்.
தொடர்புக்கு: 0777310588/0775579373

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
14 . 11 . 1976



மறைவு
04 . 12 . 2025

**பிறேமினி திருக்குமார்**

**(S.V.முருகேசு நிறுவனத்தில் கணக்காளராக கடமையாற்றும் திருக்குமார் அவர்களின் அன்புத் துணைவியார்)**

அவர்கள் (04.12.2025) வியாழக்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


**உரிமையாளர்களும் ஊழியர்களும்**

| | | | |
|---|---|---|---|
| S.V.M (Pvt) Ltd | S.V.என்ரபிரைஸ் | S.V.முருகேசு | S.V.M Agencie(Pvt)Ltd |
| 122 Dam St, | கரடிபோக்கு சந்தி, | 154 ஆஸ்பத்திரி வீதி, | 154, ஆஸ்பத்திரி வீதி, |
| Colombo 12 | கிளிநொச்சி. | யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

(CR/46644) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 ஆவது நினைவலைகள்



வையத்தின் மைந்தனாக 16.08.1963

தெய்வத்தின் சொந்தமாக 06.12.2006

### அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்

முன்னைநாள் ஆசிரியர் - யா/ மிருசுவில் அ.த.க. பாடசாலை

தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் நீங்காது
எம்முள் இறையாகி என்றென்றும்
எமக்கு நல்லனவே தந்திடுவீர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீங்காத நினைவுகளுடன்
அன்பு மனைவி திலகவதி
மற்றும் குடும்பத்தினர்.

நாவற்காடு,
வரணி.

(CR 46639) A

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 14 . 10 . 1941



ஆண்டவன் அடியில் 07 . 11 . 2025

### அமரர் துரைரத்தினம் கமலாவதி

ஆழ்கடல் முத்தாம் - எம் அம்மா
அலைகடல் சோகத்திலும் அழியாத சுவடாய்
கடல் வழிப் பயணத்திலும் கலங்கரை விளக்காய்
காட்டு வழிப் பாதையிலும் ஒளி விளக்கான அம்மாவே

மாதம் கடந்திடினும் மாறாது உந்தன் பாசம்
31ம் நாளில் உம் ஆன்ம சாந்தி
பிரார்த்தனையில் உம் குடும்பத்தினர்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அமரரின் வீட்டுக்கிருத்திய வைபவம் நாளை (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான வீதி
வலியடைப்பு,
பண்டத்தரிப்பு

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(CS 308391 E

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 03 . 1951



மறைவு 03 . 12 . 2025

### ஜெயபாலன் நாகலட்சுமி

நயினாதீவை பிறப்பிடமாகவும், அளவெட்டியை வதிவிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட ஜெயபாலன் நாகலட்சுமி அவர்கள் 03.12.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜெயபாலன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற துரைச்சாமி - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், குகனருள் (லண்டன்), கஜனருள் (லண்டன்), புராதனி (கொழும்பு) ஆகியோரது பாசமிகு தாயாரும், யோகம்மா (யாழ்ப்பாணம்), ஸ்ரீஸ்கந்தராஜா (உரிமையாளர், சுமங்கலி ரெஸ்ட், கொழும்பு) சந்திரசேகரம் (கொழும்பு), சாந்தினி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இலெட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், யாழினி (லண்டன்), கிரிஜா (லண்டன்), கருணாகரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிதம்பரநடராஜா (யாழ்ப்பாணம்), சதாரூபி (ஓய்வுபெற்ற ஆசிரியர், விவேகானந்தா கல்லூரி, கொழும்பு), ஜெயராணி (கொழும்பு), காலஞ்சென்றவர்களான பிரபாகரன், கந்தசாமி, இராசமணி, துரையப்பா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கஜானி (Doctor, லண்டன்), சஜானி (மருத்துவபீடம் லண்டன்), சரண்யன் (மருத்துவபீடம் லண்டன்), அபிராமி (ஆசிரியர், Pamela de silva montessori School, கொழும்பு), தஷானன் (இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்), நிதர்சன வருண் (IT HND), பிரணவி (லண்டன்), கஜனவி (லண்டன்), அருண் (லண்டன்) ஆகியோரது பாசமிகு பேர்த்தியாரும், சுதாகரன் (கனடா), பிரபாகரன் (டென்மார்க்), சுகிர்தா (கனடா), சுபாஷினி (பிரான்ஸ்), ஜெயகவிதா (லண்டன்), சிந்துஷா (Development officer, யாழ்ப்பாணம்), சுனந்தா (Doctor, கொழும்பு), ஸ்ரீதுஷாரா (Doctor, லண்டன்), சங்கீர்த்தா (கொழும்பு), விஜிகரன் (Quantity Surveyor, கொழும்பு), கம்ஷாநந்தி (மாணவி - இந்து மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்), தவராஜன் (பிரான்ஸ்), புஷ்ப வினோதன் (லண்டன்), பேரின்பராணி (கொழும்பு), ரஜனி (கொழும்பு), மாலினி (லண்டன்), குணேந்திரன் (Manager abans கொழும்பு), மதிவதனி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு பெறாமக்களும், நாகேஸ்வரன் சத்தியவிமலா, பாலேந்திரன் சிவஞானசோதிமலர், தில்லையம்பலம் செல்வராணி ஆகியோரின் சம்பந்தியும், தில்லைவனம், குருசாமி ஆகியோரின் சகலியும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (150/10, சிவராஜா அவெனியு, பலாலி வீதி, திருநெல்வேலி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 340 5399

(CR 46640) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 03 . 1951



மறைவு 03 . 12 . 2025

### வேலாயுதம் வாமதேவன்

புன்னாலைக்கட்டுவன் ஈவினையை பிறப்பிடமாகவும் அமெரிக்கா கலிபோனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் வாமதேவன் கடந்த 03.12.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குகேந்திரா - பர்வததேவி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குமேதினியின் அன்புக் கணவரும், மகாதேவன் (கனடா), மல்லிகாதேவி, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, தர்மகுலதேவன் மற்றும் ஞானேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காந்திமதி (கனடா), சந்திரலிங்கம், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் நாகினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மரீன்கௌதமன் (கனடா), நிறஞ்சளா, றெஜினோல்ட் சுதர்சன் (கனடா), லக்ஸ்மன் (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ரேவிதி (கனடா), மிதுலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், றஜிதா, காலஞ்சென்ற றதீஸ் மற்றும் றமேஸ் (ஆசிரிய ஆலோசகர்), றணேஸ், காலஞ்சென்ற சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமனும், றொகான் (கனடா), நந்தகுமாரி (ஆசிரியை), சோபனா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஈவினையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஈவினை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஈவினை தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 60094) A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் எலிக்காய்ச்சல்!

## நோயாளி ஒருவர் அடையாளம்

கிளிநொச்சி, டிசெ. 6

கிளிநொச்சி - கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரியின் பிரிவில் எலிக்காய்ச்சலுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அரச அலுவலகம் ஒன்றில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றும் நபரொருவரே இவ்வாறு எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். அந்த நபர் தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். வெள்ளப் பேரிடரைத் தொடர்ந்து நாடெங்கும் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-113)



## பொதுவிடத்தில் வெற்றிலைத் துப்பல்

# மீன் வியாபாரிக்கு 3,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 6

பொதுவிடத்தில் வெற்றிலை மென்று உமிழ்ந்த மீன் வியாபாரிக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிட்டுள்ளது.

பருத்தித்துறை நகரில் உள்ள மீன்சந்தையில் மீன்வியாபாரம் செய்யும் போது வெற்றிலை மென்று பொதுவிடத்தில் எச்சில் உமிழ்ந்தவருக்கு எதிராக பருத்தித்துறை நகர சபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. சந்தேகநபர் தனது குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் அவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. (ம-100)


# பெறுகை அறிவித்தல்

## மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்.

## தனியார் பாதுகாப்புச் சேவை - 2026

1. மாந்தை கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றன.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் தொலைபேசி:-0212284434 தொலைநகல்: 0212283476 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 08.12.2025 முதல் காலை 09.00 மணியிலிருந்து மாலை 02.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், மாந்தை கிழக்கு பிரதேசசபை பாண்டியன்குளம் எனும் இடத்திலிருந்து 08.12.2025ம் திகதியிலிருந்து 21.12.2025 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச் சபை, மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் எனும் முகவரிக்கு 21.12.2025 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | தேவையான ஆளணி எண்ணிக்கை | | கேள்வி பிணை வைப்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இரவு | பகல் | கேள்வி செல்லுபடியாகும் நாட்கள் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை தொகை | கேள்வி பிணை செல்லுபடியாகும் நாட்கள் |
| 1 | NP/14/44(2)/03 /Sec.Ser/2026 | பாதுகாப்பு சேவை | 1 வருடம் | 01 | 01 | 49 நாட்கள் | 08.02.2026 | 10,000.00 | 08.03.2026 |


6. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள் கேள்வி கோரவோ பெறுகைக் குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை,**
**பாண்டியன்குளம்.**

(CR 46637) E



# மரண அறிவித்தல்



தோற்றம்
05.05.1948

மறைவு
03.12.2025

## கந்தையா மகாலிங்கம்

**(சாவகச்சேரி முன்னாள் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் முதலாளி, பிள்ளையார் கட்டட உரிமையாளர்)**

சரசாலை வடக்கினை பிறப்பிடமாகவும் கிராம்புவில் சாவகச்சேரி வடக்கினை நிரந்தர வதிவிடமாகவும் கனடாவினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தையா (துரைச்சாமி) மகாலிங்கம் அவர்கள் கடந்த 03.12.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் (ராசா) - நல்லம்மா தம்பதியரின் மருமகனும், தங்கமணியின் (கிளி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரமசாமி, நடராசா, செல்லத்துரை மற்றும் தவயோகேஸ்வரி, இராஜேஸ்வரி, குமாரவேலு ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கணேசலிங்கம் (இந்திரன், டென்மார்க்), தவமணி (வசந்தா), சறோசாதேவி (நிதி, லண்டன்), சறோசாமலர் (மலர், டென்மார்க்), லிங்கராஜ் (பிரதீஸ், டென்மார்க்), கமலாம்பிகை (பவளம்) ஆகியோரின் மைத்துனரும், அருணா (கனடா), மிருணா (கனடா), ஐங்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகேஸ்வரன் (கனடா), சசிகுமார் (கனடா), தனோசா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பருகணி, கர்நேயா, நர்கனி, ஆதிரன், அகழ்வன், சுரபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிராம்புவில்,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.


தகவல் :
**குடும்பத்தினர்**
**தொ.இல:076 5857 766**

CR 46291) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 03 . 1954



மறைவு
05 . 12 . 2025

### வேலுப்பிள்ளை அருட்சோதி

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும், இல. 355, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அருட்சோதி அவர்கள் நேற்று (05.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நாவலப்பிட்டி மயில்வாகனம் - கனகம்மா தம்பதியரின் மருமகனும், புஷ்பராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, சிவசோதி, ஞானசோதி, இரத்தினசோதியின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தவமணி, சரஸ்வதி மற்றும் தனலட்சுமி, திலகவதி, இந்திராணி, பத்மராணி, இரத்தினசிங்கம், இரத்தினராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.12.2025) காலை வைற் கௌஸ், மெயின் வீதி, யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (07.12.2025) காலை 10.00 மணிக்கு இறுதி கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
மைத்துனர்.

(CS 30868) A

## மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 11 . 1952



இறப்பு
30 . 11 . 2025

### பொன்னையா பாலசிங்கம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசிங்கம் அவர்கள் கடந்த 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற கனகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னையா - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற இராசலெட்சுமி மற்றும் இரத்தினசிங்கம், சரஸ்வதி, இராசலிங்கம், கந்தசாமி, காலஞ்சென்ற லலிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான குணலெட்சுமி, யோகலிங்கம் மற்றும் புஸ்பராசா, பேரின்பராணி, நகுலேஸ்வரன், தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனிதா (லண்டன்), துவாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன் (லண்டன்) அவர்களின் பாசமிகு மாமனாரும், அஞ்சனா, பிரணவறாம், பிரதிஜித்றாம் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசாரி லேன்,
தாவடி.

தகவல் :
குடும்பத்தினர்
தொ.இல:76 2753 505

(CS 30860) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 15.03.1938
இறப்பு 04.12.2025

### தியாகராஜா ஜெயலட்சுமி

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா ஜெயலட்சுமி அவர்கள் கடந்த 04.12.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற தியாகராஜா (கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், தவமணி காலஞ்சென்ற அன்னபூரணம் (இந்திரா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், துர்ராசா, சண்முகம், நாகேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், ஏகாம்பரம், சோதிமணி, கமலாம்பிகை மற்றும் காலஞ்சென்றவர்களான தியாகலிங்கம், சண்முகசுந்தரம், பரமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெயந்தி (டென்மார்க்), சாந்தி, வசந்தி, சுகந்தி (பிரான்ஸ்), வாணி, பாலா (லண்டன்), ராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மதனராஜா (டென்மார்க்), சிவமூர்த்தி, ராசதுரை, மோகனதாஸன் (பிரான்ஸ்), சூரியன் (ஓய்வுநிலை தபால் ஊழியர்), டிலிஷியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தரணிகா (லண்டன்), காயத்ரி, கம்சாயினி (பிரான்ஸ்), பவீந்திரன், துஷ்யா, கௌரிதரன், சாயிசங்கர், கௌரிசங்கர், உமாசங்கர், கஜலக்ஷி, நிலக்ஷி (லண்டன்), டிலுக்ஷி (லண்டன்), வரோஷன் (லண்டன்), செங்கோடன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ருத்ராட்சன், ஆருத்சன் (லண்டன்), கஜனிகா, கபிஷனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும், கௌரி, கலா (லண்டன்), ஜெயா (லண்டன்), ஸ்ரீ, நந்தன், ரமணா, கண்ணா, மாலினி, சதீஸ், தினேஷ், அசோக் (கனடா), வசந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை பிறவுண் வீதி, 2ம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.
சூ.சாயிசங்கர் (பேரன்) - 077 741 8945
செ.சூரியன் (மருமகன்) - 077 935 2439

(CS 30859) A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வயல் கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

மல்லாகம் பகுதியிலுள்ள வயல் கிணற்றில் இருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார். மல்லாகம் நீலியம்பணை பகு தியைச் சேர்ந்த பொன்னர் பஞ்சலிங்கம் (வயது -67) என்ற முதியவரே சடலமாக மீட் கப்பட்ட வராவார். இறப்பு விசாரணை களை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெய பாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26)

### தவறிவிட்டது

கடந்த 03.12.2025 அன்று சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் பெட்டக திறப்பு ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சண்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 44 60 241 (CS 30857) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 11 . 1974

மறைவு 04 . 12 . 2025

### திருமதி பிறேமினி திருக்குமார்

(ஆரம்ப கல்வி ஆலோசகர் - யாழ். வலயம்)

மீசாலை வடக்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறேமினி திருக்குமார் அவர்கள் கடந்த (04.12.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், திருக்குமார் அவர்களின் பாசமிகு மனைவியும், நிதிக்சன் அவரின் அன்புத் தாயாரும், சுகந்தினி (சுவிஸ்), சுயேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராகுலன், சிவதர்மினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கஜானா, றகீபன், றஜீபன் ஆகியோரின் அன்புச் சித்தியும், ராகுல்ராம், கோகுல்ராம், அமல்ராம் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.40, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
தொடர்பு: 077 30 58 033 (CS 30863) A

## மரண அறிவித்தல்



### திரு. கந்தசாமி கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்)

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு–வெள்ளவத்தை, மாதகல் பிள்ளையார் கோவிலடி ஆகியவற்றை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. கந்தசாமி கனகரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்) அவர்கள் கடந்த 05.12.2025 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி – சிதம்பரம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் , அமரர் செல்லையா – மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், யாழினி, தமிழினி, மாதினி, சொரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரன், காந்தீபன், துஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நல்லையா, குகநாதன், நிர்மலாதேவி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இன்பவதி, கௌரி, வரதராஜா, ஈஸ்வரி, சண்முகதாஸ், சிறீஸ்கந்தராசா ஆகியோரின் மைத்துனரும், பிரதீபா, பிரசன்னா, றஜீவன், மீரா, அபிராமி, சாதுரியா, பிரவீணன் ஆகியோரின் பெரியப்பாவும், மகனிஷ், மானுஷ், மௌறிஷ், கார்திகா, வராகினி, செந்தில் குமரன், ஷாலினி ஆகியோரின் அன்பு மாமாவும், ஹரிஷ், ஹரிணி, ஹாஷினி, நவயுகன், தீட்ஷண்யன், அம்ருதா, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.12.2025 நாளை (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: அரசடி பிள்ளையார் கோவிலடி,
மாதகல்– வடக்கு, மாதகல்.

0774 952 870 (மகன்) க. சொரூபன்
0771 275 692 (சகோதரர்) க. குகநாதன்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 16 . 12 . 1944

மறைவு 06 . 11 . 2025

### அமரர் கந்தசாமி விமலபூசணி

திதி: ஐப்பசி திங்கள் அபரபக்க துதியை

அன்பிற்கு இலக்கணமாய் இன்பத்தின் பிறப்பிடமாய்
பாசத்தின் விளைநிலமாய் - நீங்கள்
வாழ்ந்திட்ட வாழ்வியல் வசந்தமானது
நீண்ட நினைவுகளை - எம்
நெஞ்சங்களில் சுமக்கவைத்து
பிரிவுத் துயர் தந்து சென்று விட்டீர்கள்
முப்பத்தொரு நாட்களென்ன - எம்
உயிர் மூச்சு உள்ளவரை
நீள நினைந்திருப்போம்...

## 38ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 11 . 1936

மறைவு 04 . 12 . 1987

### அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(அருள்முருகன் ஜுவல்லரி ஸ்தாபகர்)

திதி: கார்த்திகை திங்கள் பூரணை

"அப்பா" என்ற அழகான உறவு
எங்களைப் பிரிந்து
ஆண்டுகள் பலவாகினதே!
எப்போதும் உங்கள் இனிய நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிழலாய்...
எங்கள் உயர்வுக்கு உங்கள் ஆசிகள்
என்றென்றும் கிடைத்திட இறைவனை
வேண்டுகின்றோம்.

157, சாரங்கா நகை மாடம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தின்...

கப்பலை, தமிழக முதல்வர் ஸ்டாலின் இன்று கொடியசைத்து அனுப்பி வைக்கவுள்ளார் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.
(அ-ம)

## யாழ்ப்பாணப்...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-
டித்வா புயலால் இலங்கையில் பேரழிவுகள் ஏற்பட்டன. மலையகம் உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் சற்றுக் குறைவானவையே. அதிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு இன்னும் குறைவானது. இதை நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.
ஆனால், புயலால் பெரும் சேதத்தை எதிர்கொள்ளாத யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 459 வீடுகள் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு, 36 கோடியே 14 லட்சத்து 75 ஆயிரம் ரூபா வீடுகளைத் தூய்மைப்படுத்தும் பணிகளுக்காகப் பெறப்படவுள்ளது. உண்மையில் இது தவறான விடயமாகும். எம்மைப் பொறுத்தவரை பாதிக்கப்படாத தரப்பினருக்கு இந்த நிதி செல்லக்கூடாது. அதேநேரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி செல்லாமலும் விடக்கூடாது. இந்த இரண்டு விடயங்களில் எது நடந்தாலும் அது தவறுதான். எதிர்வரும் திங்கட்கிழமை இந்த நிதி விடுவிக்கப்படவுள்ளது. எனவே யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு பணத்தைப் பெறுபவர்களின் பெயர் விவரங்களை பிரதேச வாரியாக விரைவாக பிரதேச செயலகங்கள் தோறும் காட்சிப்படுத்த வேண்டும். அப்போதுதான் இதில் உள்ள மோசடிகள் தெரியவரும்.
அத்துடன், இந்த நிதிக் கோரிக்கையின் பின்னணியில் தேசிய மக்கள் சக்தியினரின் செல்வாக்கு உள்ளதாக எம்மால் நம்பகரமாக அறிய முடிகின்றது. இது விமர்சனக் கருத்தல்ல. மிகவும் பொறுப்புடன் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றேன் - என்றார்.
(அ-ம-26)

## ஐ.எம்.எப்....

சர்வதேச நாணய நிதியத்தின், நீடிக்கப்பட்ட கடன் வசதியின் ஆறாவது தவணையான சுமார் 350 மில்லியன் அமெரிக்க டொலர் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இலங்கைக்கு வழங்கப்படும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.
டித்வா இயற்கைப் பேரிடருக்குப் பின்னர் நிலைமையை மதிப்பிடுவதற்கும் நிவாரணம், மீட்புப் பணிகள் மற்றும் சீரமைப்பு செயற்பாடுகளுக்கான உதவிகளை ஒருங்கிணைப்பதற்கும் இராஜதந்திர தூதுக் குழு, இருதரப்பு மற்றும் பலதரப்பு அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்களை ஒன்றுசேர்த்து, நிதி அமைச்சு கடந்த புதன்கிழமை உயர்மட்ட நன்கொடையாளர் கூட்டத்தை ஏற்பாடு செய்தது.
மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபோன்சு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டார ஆகியோர் உட்பட அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், பிரதமர் அலுவலகம், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் திறைசேரித் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இதன்போதே, எதிர்வரும் இரு வாரங்களில் நாணய நிதியத்தின் ஆறாவது கட்ட கடன் வசதிகள் வழங்கப்படும் என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
(அ-எ-இ)

## வீடுகளை...

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை சுத்தம் செய்வதற்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். மீள்குடியேற்றத்துக்குரிய அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.
முற்றாக சேதமடைந்துள்ள - மீள்குடியேற முடியாத நிலையில் உள்ள வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு 50 இலட்சம் ரூபா கொடுக்கப்படும்.
அபாய வலயங்களுக்கு மீண்டும் செல்வதற்கு இடமளிக்கமாட்டோம். அதற்குப் பதிலாக அரச காணி வழங்கப்படும். அரச காணி இல்லாவிட்டால் காணி வாங்குவதற்கு 50 இலட்சம் ரூபாவரை கொடுப்பனவு வழங்கப்படும். அதாவது ஒருவர் வீட்டை முற்றாக இழந்திருந்தால், காணியும் இல்லாத விடத்து ஒரு கோடி ரூபா பெறத் தகுதி உடையவர்.
பகுதியளவு சேதமடைந்துள்ள வீடுகளை புனரமைப்பதற்கு அதிகபட்சமாக 25 இலட்சம் ரூபாவரை வழங்கப்படும். நான்கு கட்டங்களாக இதற்குரிய மதிப்பீடு இடம்பெறும்.
பாதிக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்களுக்கும் உரிய இழப்பீடு வழங்கப்படும். இதற்குரிய நடவடிக்கையை தாமதப்படுத்த முடியாது. இடைக்கால நிதி அறிக்கைக்குரிய அனுமதி வழங்குவதற்கு ஆதரவு தாருங்கள். நாடாளுமன்றத்தை எதிர்வரும் 19ஆம் திகதி கூட்டுவதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார்.
(அ-ம-44)

## மக்களைப்...

னெடுக்கப்படவில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எம்முடன் தற்போது வாழவேண்டியவர்களை நாம் இழந்து தவிக்கின்றோம். சில பகுதிகளில் கிராமங்களே மூழ்கியுள்ளன. உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. சிலர் உயிரிழந்திருந்தாலும் இன்னும் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. காணாமல் போயுள்ளவர்களை உறவுகள் தேடுகின்றனர். நாம் கவலை அடைகின்றோம்.
இறந்தவர்களை எம்மால் மீள வழங்க முடியாது. ஆனால் அவர்களின் உறவுகளுக்கு சிறந்ததொரு நாட்டை கையளிக்க முடியும். அதற்குரிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது.
அனர்த்தங்கள் உயிர்களை, உடமைகளை பறித்தாலும் எமது மக்கள் மத்தியில் உள்ள மனிதேயத்தை பறிக்க முடியாது என்பது மீண்டும் உறுதியானது. மக்கள் தம்மால் முடிந்த உதவிகளை வழங்கி வருகின்றனர். வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் எல்லா வழிகளிலும் உதவி வருகின்றனர். இது பெருமையளிக்கின்றது.
மக்களுக்கான சிறப்பான சேவையை வழங்கிய முப்படையினர், பொலிஸார், அரசாங்க அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு நன்றிகள். படையினர் உயிர்த் தியாகம்கூட செய்துள்ளனர். இவர்கள் நிச்சயம் வரலாற்றில் இடம்பிடிப்பார்கள்.
நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து இலங்கையை மீட்பதற்காக உதவி செய்த வெளிநாடுகளுக்கு நன்றிகள்.
நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலையை எதிர்கொள்வதற்காகவே சட்டம் அமுல்படுத்தப்பட்டது. எந்த சந்தர்ப்பத்திலும் அரசமைப்பை மீறி நாம் செயல்படவில்லை. மக்களின் உரிமையை மீறும் வகையில் நாம் அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தமாட்டோம். எம்மை விமர்சிப்பவர்களுக்கு எதிராக நாம் இந்தச் சட்டத்தை பயன்படுத்தமாட்டோம். மக்களுக்காகவே அதனை பயன்படுத்துவோம்.
கம்பளையில் ஆயிரம் பேர் உயிரிழந்துவிட்டனர் என எம்.பி. ஒருவர் கூறினார். நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் ஒளிந்துகொண்டே இதனை சொன்னார். வெளியில் வைத்து இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தால் நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். எதிரணியில் இருந்தாலும் சிலர் பொறுப்புடன் செயல்பட்டனர். மேலும் சில எதிரணி அரசியல்வாதிகள் அனர்த்தத்திலும் அரசியல் செய்தனர்.
புதிய வரவு- செலவுத் திட்டம் முன்வைக்கப்படமாட்டாது. நாட்டை மீட்பதற்குரிய எமது திட்டத்தின் ஓரங்கம்தான் வரவு செலவுத்திட்டமாகும். எனவே, ஒதுக்கீடுகளை உரிய வகையில் பயன்படுத்தலாம். ஒதுக்கீட்டில் அனர்த்த நிலைமை மீட்புக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம். அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு உதவிகள் வழங்கப்படும் - என்றார்.
(அ-ம-44)

## உள்ளக...

நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை இடைக்காலத் தடைக் கட்டாணை பிறப்பித்துள்ளது. குறித்த கட்டளையை உடனடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில் 12 பரப்பளவுக் காணியைக் கையகப்படுத்தி, அதில் 370 மில்லியன் ரூபா செலவில் உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளுக்காக கடந்த 23ஆம் திகதியன்று அடிக்கல்லும் நடப்பட்டது.
யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நூற்றாண்டு காலப் பழமையான மரங்கள் காணப்படும் நிலையில் அவற்றை அழித்து உள்ளக விளையாட்டரங்கு அமைக்கக் கூடாது எனப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில், கிருஷ்ணவேணி சிறிதரன் என்ற மனுதாரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்து வாதங்களை முன்வைத்தார். அந்த வாதங்களின் அடிப்படையில் இந்தக் கட்டாணையை யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி சிவகுமார் பிறப்பித்துள்ளார்.
வழக்கு விசாரணைக்கு பின்னர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் பழைய பூங்காவிலே சில கட்டட நடவடிக்கைகள் செய்யப்படுவதாக அறிந்து அதை தடுக்கும் முகமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒரு வழக்கு இதுவாகும். புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற போர்வையிலே பழைய பூங்காவிலே 190 வருடங்கள் பழமை வாய்ந்த மரங்கள் வெட்டப்படுவதாகவும் அங்கே கட்டட வேலைகள் தொடங்க இருப்பதாகவும் அறியக் கிடைத்தது. அதற்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தின் மத்தியிலே இந்த பூங்கா இருக்கிறது. உலகிலே இருக்கிற எந்த நகரமாக இருந்தாலும் அதன் மத்தியில் பூங்காவொன்று இருக்கும். அந்த நகரத்தினுடைய சூழலியல் சமநிலையை பேணுவதற்கு இப்படியான பூங்காக்கள் அத்தியாவசியமானவை. இந்த பூங்கா உள்ள ஆதனம் யாழ்ப்பாணத்தின் முதலாவது மாவட்டச் செயலராகக் கடமையாற்றியவருடையதாகும். அவர் தன்னுடைய சொந்த ஆதனத்தை யாழ்ப்பாண மக்களுக்காகவும் சூழலை பாதுகாப்பதற்காகவும் பறவைகள் சரணாலயமாகவும் வழங்கியுள்ளார்.
1800ஆம் ஆண்டுகளில் இது உறுதிகள் ஊடாக வழங்கப்பட்ட ஓர் ஆதனம். இந்த ஆதனத்துக்கு நம்பிக்கை பொறுப்பாளர்களாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் உட்பட பல நிர்வாகிகள் உள்ளனர். ஒரு தர்மசாதனமாகவும் நம்பிக்கை பொறுப்பு உறுதியும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.
அதற்கு மேலதிகமாக கடந்த மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் பழைய பூங்கா சம்பந்தமாக நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில் அங்கே எந்தவிதமான கட்டட நடவடிக்கையும் செய்யப்படக்கூடாது என்றும் எவருக்கும் இந்த நிலத்தை வழங்கக் கூடாது என்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளராலேயே முன்மொழிந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் மீறும் வகையிலே விசேடமாக நம்பிக்கை பொறுப்பை மீறுகிற வகையில் நம்பிக்கைப் பொறுப்பாளர்களே செயல்படுகிறார்கள் என்று முறையிட்டு நம்பிக்கை பொறுப்பு சட்டத்தின் 63ஆம் பிரிவின் கீழே அதை தடுக்கும் முகமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நாங்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையிலும் மன்றில் செய்யப்பட்ட சமர்ப்பணங்களின் அடிப்படையிலும் மன்று திருப்தி அடைந்து எதிராளிகளுக்கு அழைப்புக் கட்டளையும் ஒரு இடைக்காலத் தடைக் கட்டளைக்கான அறிவித்தலும் வழங்கியுள்ளது. அத்துடன், இன்றிலிருந்து 14 நாள்களுக்கு அமுலில் இருக்கத்தக்கதாக இந்த அபிவிருத்தி என்று நடத்தப்படுகிற செயற்பாடுகளை தடுப்பதற்கான கட்டாணை ஒன்றையும் நீதிமன்றம் தற்போது வழங்கி இருக்கிறது. அது உடனடியாக அவர்களுக்கு சேவிக்கப்படுவதற்காக பிஸ்கால் மூலமாக மட்டுமல்ல வட்ஸ்அப் மூலமாகவும் தொலைபேசி குறுஞ்செய்தி மூலமாகவும் அவர்களுக்கு அவசர அறிவிப்பு அனுப்பும் படியாக மன்று கட்டளை பிறப்பித்துள்ளது - என்றார்.
(அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கையில் பேரிடர் ஏற்பட்டுள்ளதால் சர்வதேசத்தின் பார்வை இலங்கையை நோக்கித் திரும்பியுள்ளது. எனவே, சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியா, சீனா, ரஷ்யா உட்பட உலக நாடுகளின் தலைவர்களை இதற்கு அழைக்கலாம். அவர்கள் நிச் சயம் ஒத்துழைப்பு வழங்குவார்கள். ஜனாதிபதி அழைப்பு விடுத்தால் ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள்கூட இதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்கு உதவி வழங்கக்கூடும். இந்த நெருக்கடி நிலைமையை அரசாங்கத்தால் தனித்து எதிர்கொள்ள முடியாது. எனவே, முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் - என்றார்.

(அ-ம-44)

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

**பரிபூரணம்**

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஈ - சன்ஸ் அந்தியகால சேவை

இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**021 222 2695 / 0774290613**

## Crew Cab வாகனம் விற்பனைக்கு

சங்கரப்பிள்ளை வீதி,மானிப்பாயில் WP PK இலக்கமுடைய Crew Cab (1st Owner-முதலாவது உரிமையாளர்) வாகனம் விற்பனைக்கு உள்ளது. இதற்குரிய கேள்விக் கூறல்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்பு கொள்ளும் நேரம்:

திங்கள், புதன் - பி.ப 01.00 - 4.30

செவ்வாய், வியாழன் - காலை 9.00 - பி.ப 01.00

வெள்ளி காலை 09.00 - பி.ப 04.30

மேலதிக தொடர்புகளுக்கு:

**0761497925, 0743827198**

## வேலைக்கு ஆட்கள் தேவை

(பெண்கள்)

தையல் தெரிந்தவர்கள் அல்லது தையல் கற்க ஆர்வமுள்ள பெண்கள் வரவேற்கப்படுகிறார்கள். நல்லூரினை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் விண்ணப்பிப்பது விரும்பத்தக்கது.

ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

**077 820 1525, 076 624 2311**

(CS/60096) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் நவாலியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- நவாலி அரசடிச் சந்தியிலிருந்து 250m தூரம்
- நவாலி மகா வித்தியாலயம் 250m தூரம்
- நவாலி கொத்துகட்டி வீதியில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

**தொடர்பு:- 076 990 3039**
**074 029 2338**

(CS 30864) A

## உடனடி வேலைவாய்ப்பு

**யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல Hotel ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.**

- Dishwash (பாத்திரம் கழுபுவர்கள்)
- Security (பாதுகாப்பு உத்தியோகத்தர்)
- Waitress (உணவு பரிமாறுபவர்கள்)
- Kitchin Helpers (சமையல் உதவியாளர்)
- Bill Counter Work
- Office Staff (A/L 3 Pass Computer and Age sbove 35)

தொடர்புகளுக்கு:-

**076 077 1020**

(CS/60078) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவகிரி மெயின் றோட்டுடன் 48 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.


- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியில்
- செம்மண்தரை. நிலப்பரப்பு. குடியிருப்புக்கள் சூளவுள்ள பகுதி
- நிலாவரைக் கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 10 km

**தொடர்பு:- 076 860 2770**
**076 987 8617**

(CS 30865) A

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம் 15.07.1939 — மறைவு 05.12.2025

## சண்முகம் கனகராசா

தச்சன்தோப்பு கைதடியைப் பிறப்பிடமாகவும், 27/7, வைமன் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கனகராசா நேற்றைய தினம் (05.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சண்முகம் - பாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசபூபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, கந்தசாமி, ஆனந்தராஜா, தங்கராசா மற்றும் முத்துமலர், தங்கமலர் ஆகியோரின் சகோதரனும், ரூபதாஸ், ரூபஜானகி, கிருபதாஸ் (ரூபி நகை மாடம்- திருநெல்வேலி, ஸ்ரீமுருகன் நகைப்பூங்கா - பூநகரி), கண்ணதாஸ் (ரூபி நகை மாளிகை - கொடிகாமம், JKR நகை மாளிகை - சாவகச்சேரி), ரூபரஞ்சினி ஆகியோரின் தந்தையும், லதா, ஜெயமெலனியூஸ், சந்திரா, தேனுஜா, அம்பிகைகுமார் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகேந்திரராஜா, யோகானந்தராஜா ஆகியோரின் மைத்துனரும், தர்சிகா, லிசானி, கோகுலதாஸ், அக்ஷயன், டினோஜா, ஷாருஜா, கபிஷாளினி, நிவேதிகன், அபிலக்சன், ஆதர்பிகா, ஆர்மிகன், அக்ஷரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2025) ஞாயிற்றுக் கிழமை அவரது வைமன் வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
தொ.இல:077 990 5819
077 617 3046

27/7, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(CS 30866) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.